# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

எண்.208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை–600 106

தொலைபேசி எண் : 2363 5010, 2363 5011 நிகரி : 2363 8282, 2363 8283

மின்னஞ்சல் – tnsec.tn@nic.in இணையதளம் - www.tnsec.tn.nic.in


## செய்தி வெளியீடு

செய்தி வெளியீடு எண் 32/2019 நாள் 23.12.2019

### தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

சாதாரண உள்ளாட்சித் தேர்தல்–2019

சென்னை, தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய கூட்டரங்கில் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் முனைவர் இரா.பழனிசாமி,இ.ஆ.ப.(ஓய்வு) அவர்கள் உள்ளாட்சித் தேர்தல் நடைபெற உள்ள 27 மாவட்ட தேர்தல் அலுவலர்கள்/மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள் ஆகியோருடன் சாதாரண உள்ளாட்சித் தேர்தல்–2019க்கான தயார்நிலை ஏற்பாடுகள் குறித்து காணொலி காட்சி (Video Conferencing) வழியாக 23.12.2019 அன்று ஆய்வு மேற்கொண்டார்கள். தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய செயலாளர் முனைவர் இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., காவல் துறைத் தலைவர் (தேர்தல்) திரு.ச.ந.சேஷசாய்,இ.கா.ப., திருமதி.ப.கண்ணம்மாள்,இ.கா.ப., மற்றும் மாநில தேர்தல் ஆணைய அலுவலர்கள் கலந்து கொண்டனர். இக்காணொலி ஆய்வுக்கூட்டத்தில் ஊரக உள்ளாட்சித் தேர்தலை நேர்மையாகவும், வெளிப்படைத் தன்மையுடனும் நடத்துவதற்கு கீழ்க்கண்ட பொருள்கள் குறித்து விவாதிக்கப்பட்டு அறிவுரைகள் வழங்கப்பட்டது.

- கட்சி சார்ந்த தேர்தலுக்கான வாக்குச்சீட்டுகளை அச்சடித்தல் மற்றும் கட்சி சாரா தேர்தலுக்கான வாக்குச்சீட்டுகளை பிரித்தல் தொடர்பான பணிகள்;
- முதல் கட்ட தேர்தல் பணியாளர்களுக்கு பணி நியமன ஆணை அளித்தல் (26.12.2019);
- வாக்குப் பதிவு பொருட்களின் தயார்நிலை மற்றும் வாக்குச் சாவடிகளுக்கு பகிர்ந்தளித்தல்;
- மண்டல அலுவலர்கள், மண்டல குழுக்கள், மண்டல வரைபடம் தயார் நிலையில் இருத்தல்;
- தேர்தல் நன்னடத்தை விதிகளை செயல்படுத்துதல்;

  அ) வாக்குச்சாவடிகளில் இணைய வழி கண்காணிப்பை அமைத்தல்
  ஆ) வீடியோ ஒளிப்பதிவு செய்தல்
  இ) தேர்தல் நுண்பார்வையாளர்களை நியமித்தல்

ஈ) பறக்கும் படைகள் அமைத்தல்
உ) மாவட்ட அளவில் கட்டுப்பாட்டு அறைகள் அமைத்தல்
ஊ) தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தில் கட்டுப்பாட்டு அறைகள் அமைத்தல்

- மாவட்ட அளவிலான பாதுகாப்புத் திட்டம் இறுதி செய்தல்;
- 23.12.2019 அன்று வெளியிடப்படவுள்ள சட்டசபை தேர்தலுக்கான வாக்காளர் பட்டியலின்படி துணை வாக்காளர் பட்டியல் தயார் செய்தல் மற்றும் அச்சடித்தல்;
- பதட்டமான மற்றும் பிரச்சினைக்குரிய வாக்குசாவடிகளை கண்டறிதல் மற்றும் காவல்துறை அலுவலர்களுடன் கலந்தாலோசித்தல் மற்றும் மேற்படி பட்டியலை ஆணையத்திற்கு அனுப்பி வைத்தல்;
- தமிழ் நாடு மாநில தேர்தல் ஆணைய இணையதளத்தில் வேட்புமனு தாக்கல் முதல் தேர்தல் முடிவு அறிவித்தல் வரையிலான புள்ளிவிபரங்களை பதிவேற்றம் செய்தல்;
- வாக்குச் சாவடிகளை தயார் நிலையில் வைத்தல்;
- 'பூத் சிலிப்' பதிவிறக்கம் செய்து அச்சடித்தல் மற்றும் 24.12.2019க்கு முன்பாக விநியோகித்தல்;
- வாக்கு எண்ணும் மையங்களை தயார் நிலையில் வைத்தல்;
- தேர்தல் நுண்பார்வையாளர்களை நியமித்தல் மற்றும் பயிற்சி அளித்தல்;
- வாக்குச்சாவடி அலுவலர்கள் மற்றும் பிற தேர்தல் அலுவலர்களுக்கு தபால் வாக்குச் சீட்டுகள் வழங்குதல்;
- வேட்பாளர் செலவினம் தொடர்பான விலைப் பட்டியல் நிர்ணயித்தல்;
- வாக்கு எண்ணும் மையங்களில் இணைய வழி கண்காணிப்பை அமைத்தல், வீடியோ ஒளிப்பதிவு செய்தல் மற்றும் தேர்தல் நுண்பார்வையாளர்களை நியமித்தல்;
- வாக்கு எண்ணும் அலுவலர்களுக்கு பணி ஆணை வழங்குதல்;
- மாவட்ட தலைமை அலுவலகங்களில் புகார் பிரிவு அமைத்தல்;
- தேர்தல் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்துதல்;
- தேர்தல் தொடர்பான செலவினங்களுக்கு நிதி வழங்குதல்
- வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு மதிப்பூதியம் வழங்குதல்

மேலும், தேர்தல் நேர்மையாகவும் ஜனநாயக முறையிலும் நடைபெறுவதை உறுதிசெய்ய அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்குமாறு அறிவுறுத்தப்பட்டது.

(தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய ஆணைப்படி)

23/12/19
மக்கள் தொடர்பு அலுவலர்